TNVR090001802022

சார்பு நீதிமன்றம், விருதுநகர்.
முன்னிலை ... திரு. R.V. ராஜகுமார், B.L.,
சார்பு நீதிபதி, விருதுநகர்.

2023–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19–ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
இ.ம.எண். 1/2022
இன்
இந்து திருமண முதலேற்பு மனு எண்.43/2022

XXXXXXXXXX ... மனுதாரர்/எதிர்மனுதாரர்

/எதிர்/

XXXXXXXXXXXX ... எதிர்மனுதாரர்/மனுதாரர்

இந்த மனுவானது இந்நீதிமன்றத்தின் முன்பு 29.08.2023 அன்று இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. I. இராமமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு. R. ரவிச்சந்திரன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், சான்றாவணங்களை பரிசீலைனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து அளிக்கும்

**உத்தரவு**

மனுதாரர் மற்றும் அவரது மைனர் குழந்தை A. அபினேஷ்வரன் ஆகியோர்களது அடிப்படை தேவைகளான உணவு, உடை, மருத்துவம், கல்வி உள்ளிட்ட அனைத்து விதமான எதிர்கால தேவைகளுக்காக இடைக்கால ஜீவனாம்சமாக ஒவ்வொரு ஆங்கில மாதமும் முதல் 5 தேதிக்குள் மாதாந்திர

இடைக்கால வாழ்க்கை ஜீவனாம்சமாக தலா ரூ.15,000/− வீதம் மொத்தம் ரூ.30,000/− மற்றும் வழக்கின் செலவுத்தொகையாக ரூ.25,000/− வழங்க உத்தரவிடக்கோரி இந்து திருமணச் சட்டம் பிரிவு 24−ன் கீழ் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. <u>மனுவின் சுருக்கம் :−</u>

இந்த மனுவின் மனுதாரர் அசல் மனுவின் எதிர்மனுதாரர். அசல் மனுவானது விவாகரத்து கோரி இந்த மனுவின் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் 27.05.2007−ஆம் தேதியன்று தாயில்பட்டி கிராமத்தில் எதிர்மனுதாரரின் இல்லத்தில் வைத்து திருமணம் நடைபெற்றது. திருமணத்தின்போது மனுதாரருக்கு அவரது பெற்றோர் வீட்டில் 2½ பவுன் தங்க நகைகளும், எதிர்மனுதாரருக்கு ½ பவுன் மோதிரம் மற்றும் வாட்சி அணிவித்தனர். பண்ட பாத்திரங்கள் உள்ளிட்ட சகல விதமான சீர்வரிசை பொருட்களையும் மனுதாரருக்கு திருமணத்தின்போது கொடுத்தனர். அவை அனைத்தும் தற்சமயம் எதிர்மனுதாரர் வசமே உள்ளது. எதிர்மனுதாரர் தற்சமயம் மதுரை மாவட்டம், மேலூர், கொட்டாம்பட்டி அரசு தொடக்கப்பள்ளியில் ஆசிரியராக பணி செய்து வருகிறார். திருமணம் முடிந்த காலத்திலிருந்தே மனுதாரரை எதிர்மனுதாரர் நல்ல முறையில் வைத்து திருமண வாழ்வை மேற்கொள்ளவில்லை. இந்த சூழ்நிலையில் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் A. அபினேஷ்வரன் மற்றும் A. ஆகாஷ் பிரபு என்ற இரண்டு ஆண் வாரிசுகள் உள்ளனர். தற்சமயம் A. அபினேஷ்வரன் மனுதாரருடன் வசித்து வருகிறார். அவர் தற்சமயம் கடம்பன்குளம் இந்து நடுநிலைப்பள்ளியில் 5−ஆம் வகுப்பு படித்து வருகிறார்.

A. ஆகாஷ் பிரபு தற்சமயம் எதிர்மனுதாரருடன் வசித்து வருகிறார். மனுதாரரும், எதிர்மனுதாரரும் பிரிந்து வாழ்ந்து வருகின்றனர். மைனர் குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி எதிர்மனுதாரருடன் மனுதாரர்

எதிர்வரும் காலங்களில் சேர்ந்து வாழவே விரும்புகிறார். ஆனால், வேண்டுமென்றே எந்தவித நியாய காரணங்களுமின்றி மனுதாரரை எதிர்மனுதாரர் வேண்டுமென்றே பிரிந்து வாழ்ந்து வருவது சட்டத்திற்கும், இயற்கை நியதிக்கும் முரணானதாகும். தற்சமயம் மனுதாரர் மைனர் குழந்தை A. அபினேஷ்வரனுடன் தனது பெற்றோர் வீட்டில் அவர்களது ஆதரவில் வசித்து வருகிறார். மனுதாரரின் பெற்றோர் வயதானவர்கள் என்பதால் உடல் நலக்குறைவாலும் அவதிப்பட்டு வரும் சூழ்நிலையில் மனுதாரர் அவரது மைனர் குழந்தையுடன் அவரது பெற்றோர் வீட்டில் இருந்து வருவது அவர்களுக்கு கூடுதல் சுமையையே கொடுத்து வருகிறது.

அதேசமயம் எதிர்மனுதாரர் நல்ல வசதி வாய்ப்புடன் உள்ளார். தனது ஆசிரியர் பணியின் மூலம் மாதம் ரூ.60,000/- சம்பளம் பெற்று வருகிறார். அதன் மூலம் மிகுந்த சுகபோகமாக எதிர்மனுதாரர் வாழ்ந்து வருகிறார். எதிர்மனுதாரருக்கு சொந்தமாக விருதுநகர் மாவட்டம், தாயில்பட்டி, வினோபாபுரம் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் வீடுகள், பிளாட்டுகள் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள், இருசக்கர வாகனங்கள் மற்றும் ரொக்கப் பணம் கையிருப்பு, வங்கி கையிருப்பு, தங்க நகைகள் ஆகியவை சொந்தமாக உள்ளது. அதை வைத்துக்கொண்டு எதிர்மனுதாரர் தன் விருப்பம் போல் மிகுந்த ஆடம்பரமாக வாழ்ந்து வருகிறார். அதே நேரத்தில் மனுதாரர் தனது குழந்தை A. அபினேஷ்வரனுடன் தனித்து மிகுந்த கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார். எதிர்மனுதாரர், மனுதாரருக்கு செய்த கொடுமைகளின் காரணமாக மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகி வீட்டை விட்டு எங்கும் செல்ல இயலவில்லை. அதன் அடிப்படையில் மனுதாரரால் வேலைக்கும் செல்ல இயலவில்லை. அந்த வகையில் தனது அடிப்படை தேவைகளான உணவு, உடை, மருத்துவம் உள்ளிட்ட தேவைகளை மனுதாரர் தனது பெற்றோர்களிடம் பெற்றும், வெளி நபர்களிடம் கடன் பெற்றும் நிறைவேற்றி வருகிறார். அதே

நேரத்தில் தனது மனைவியான மனுதாரரின் அடிப்படை தேவைகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பும் கடமையும் அவரின் கணவரான எதிர்மனுதாரருக்கு உள்ளது. மனுதாரர் மற்றும் அவரது மைனர் குழந்தை A. அபினேஷ்வரன் ஆகியோர்களது அடிப்படை தேவைகளான உணவு, உடை, மருத்துவம் மற்றும் கல்வி உள்ளிட்ட அனைத்து விதமான எதிர்கால தேவைகளுக்காக இடைக்கால வாழ்க்கை ஜீவனாம்சமாக ஒவ்வொரு ஆங்கில மாதமும் முதல் 5 தேதிக்குள் தலா ரூ.15,000/- வீதம் ஆக மொத்தம் ரூ.30,000/- மாதம்தோறும் இடைக்கால ஜீவனாம்சமாக தேவைப்படுகிறது. எனவே, இந்த தொகைகளை எதிர்மனுதாரர் கொடுக்க உத்தரவிட வேண்டி மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிருரையின் சுருக்கம் :-</u>

மனு பாரா 3-ல் கூறியுள்ள சங்கதிகளில் திருமணத்தின்போது மனுதாரருக்கு போடப்பட்ட 2½ பவுன் தங்க நகை மனுதாரர் வசமே உள்ளது எனவும் மற்றும் திருமணம் முடிந்த காலத்திலிருந்தே எதிர்மனுதாரர் திருமண வாழ்வை சரிவர மேற்கொள்ளவில்லை என்று கூறுவதும் உண்மைக்கு புறம்பானது. மனு பாரா 4-ல் கூறியுள்ள சங்கதிகள் மறுக்கப்படுகின்றன. எதிர்மனுதாரர் கணவன் என்ற முறையிலும், குழந்தைகளுக்கு தகப்பன் என்ற முறையிலும் அனைத்து கடமைகளையும் சரியாக செய்து வந்தார். ஆனால், மனுதாரர், எதிர்மனுதாரரை மதிக்காமல் இருந்து வந்தார். 28.03.2018-ஆம் தேதியன்று தனது இளைய மகன் அபினேஷ்வரனை அழைத்துக்கொண்டு எவ்வித தகவலும் எதிர்மனுதாரருக்கு தெரிவிக்காமல் மனுதாரர் வீட்டை விட்டு சென்று விட்டார். பள்ளியில் திரும்பிய எதிர்மனுதாரர் தனது மனைவி மற்றும் இளைய மகனை காணவில்லை என்று மூத்த மகனிடம் கேட்டபொழுது தம்பிக்கு மூக்கில் இரத்தம் வந்ததால் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக கூறியவுடன் எதிர்மனுதாரர் பதற்றமாக வழக்கமாக

பார்க்கும் மேலூர் முரளி பால்கண்ணன் மருத்துவமனைக்கு சென்று விசாரித்தார். அங்கு மனுதாரர் வரவில்லை என்ற விபரம் தெரிந்து மனுதாரரின் செல்போனுக்கு தொடர்பு கொண்டபோது ஸ்விட்ச் ஆப் செய்து வைக்கப்பட்டிருந்தது. அதன்பிறகு அக்கம்பக்கத்தில் விசாரித்தபோது கடந்த 6 மாதங்களாக மனுதாரர் உடப்பன்பட்டியை சேர்ந்த மதுரைவீரன் என்பவருடன் பழக்கம் ஏற்பட்டு அவருடன் சென்றுவிட்டதாக தெரிய வந்தது. கடந்த 29.03.2018–ஆம் தேதியன்று மனுதாரரையும், இளைய மகன் அபினேஷ்வரனை காணவில்லை என்றும் கண்டுபிடித்து தருமாறும் புகார் அளித்துள்ளார்.

பின்னர் அந்த புகார் மனு கொட்டாம்பட்டி காவல் நிலையத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு முதல் தகவல் அறிக்கை எண்.159/2018 ஆக பதிவு செய்யப்பட்டது. ஆனால், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், மனுதாரரையும், இளைய மகனையும் கண்டுபிடிக்க முடியவில்லை. இதனால் மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளான எதிர்மனுதாரர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்தார். அந்த மனு எண்.HCP No.1829/2018 அம்மனுவை விசாரித்த நீதிமன்றம் இருவரையும் கண்டுபிடித்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய உத்தரவிட்டது. கடந்த 11.02.2019–ஆம் தேதியன்று மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். அப்பொழுது நீதிபதியிடம் மனுதாரர் தன் விருப்பப்படியே மதுரை வீரனுடன் சென்றதாகவும், தாயார் வீட்டில் இருப்பதாகவும் வாக்குமூலம் அளித்தார். இவ்வாக்குமூலத்தை பதிவு செய்த நீதிமன்றம் அம்மனுவை முடித்து வைத்தது. அதன்பிறகும் மனுதாரர் தாயார் வீட்டில் இருந்து கொண்டே மதுரை வீரனுடன் தவறான உறவை தொடர்ந்து வருகிறார். எதிர்மனுதாரர் பலமுறை உறவினர்கள் மூலமாகவும் நேரில் சென்றும் சேர்ந்து வாழ கேட்டபொழுதும் மனுதாரர் சம்மதம் தெரிவிக்கவில்லை. ஆகவே, எதிர்மனுதாரர், மனுதாரரையும்

இளைய மகனையும் வேண்டுமென்றே பிரிந்து வாழ்கிறார் என்பது முற்றிலும் பொய்யானது.

எதிர்மனுதாரர் தற்பொழுது மதுரை மாவட்டம், சின்னக்கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார். எதிர்மனுதாரர் பிடித்தங்கள் போக ஊதியமாக சுமார் ரூ.35,000/– மட்டும் பெற்று வருகிறார். மனுதாரர் கூறியுள்ளபடி ரூ.60,000/– ஊதியம் என்பது முற்றிலும் பொய்யானது. மேலும், எதிர்மனுதாரருக்கு தாயில்பட்டியில் அசையும், அசையா சொத்துக்கள் இருப்பதாக கூறுவதும் உண்மைக்கு புறம்பானது. மேலும், எதிர்மனுதாரர் தனது மூத்த மகனை பள்ளியில் படிக்க வைத்தும், தனது ஆசிரியர் வேலையையும் செய்து வருகிறார். எதிர்மனுதாரர் ஏ.2847 கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியப்பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன நாணய சங்கத்தில் தனது பழைய கடனை அடைப்பதற்காகவும், குடும்ப செலவு மற்றும் மருத்துவ செலவுனங்களை ரூ.15,00,000/– கடன்பெற்று, மாதம் மாதம் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படுகிறது. எதிர்மனுதாரரின் உறவினர்களின் உதவியால் தனது மூத்த மகனை நல்ல முறையில் பராமரித்து வருகிறார். மனுதாரரின் தவறான பழக்க வழக்கங்களால் தனது இளைய மகனின் எதிர்காலம் பாதிக்கப்படும் என்ற அச்சத்தினால் பலமுறை எதிர்மனுதாரர் கேட்டும் மனுதாரர் செவி சாய்க்கவில்லை. எதிர்மனுதாரர் இளைய மகனை தன்னுடன் வைத்து தேவையான அனைத்து கடமைகளும் செய்து பராமரிக்க தயாராக உள்ளார். மேலும், மனுதாரர் மதுரைவீரன் என்ற நபருடன் தவறான உறவை தற்பொழுதும் தொடர்ந்து வருவதால் ஜீவனாம்சம் பெற தகுதியற்றவர் ஆவார். ஆகவே, இனிவரும் காலங்களில் மனுதாரரும், எதிர்மனுதாரரும் சேர்ந்து வாழ விரும்பவில்லை. எதிர்மனுதாரர் இளைய மகன் அபினேஷ்வரனை தற்பொழுதும் பராமரிக்க தயாராக உள்ளார். மனுதாரர் இம்மனுவில் பராமரிப்பு தொகையாக மாதம் ரூ.30,000/– கோரியிருப்பது

சட்டப்படி ஏற்புடையதல்ல. இம்மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. எனவே, மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. மனுதாரர் தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.5 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

6. தற்போது மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரமானது மனுதாரருக்கு கிடைக்கக்கூடியதா என்பதே இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை.

7. அசல் மனுவானது விவாகரத்து கோரி இந்த மனுவின் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் 27.05.2007–ஆம் தேதியன்று திருமணம் நடைபெற்றதாகவும், மேற்படி திருமண வாழ்க்கையின் பயனாக 21.01.2010–ஆம் தேதியன்று ஆகாஷ் பிரபு மற்றும் 14.06.2012 அபினேஸ்வரன் என்ற ஆண் குழந்தைகள் பிறந்துள்ளதாகவும், எதிர்மனுதாரர் அரசு பணி ஆசிரியராக பணிபுரிந்து மாதம் ரூ.60,000/– வரை சம்பாதித்து வருவதாகவும், எதிர்மனுதாரருக்கு சொந்தமாக விருதுநகர் மாவட்டம், தாயில்பட்டி, வினோபாபுரம் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் வீடுகள், பிளாட்டுகள் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள், இருசக்கர வாகனங்கள், ரொக்கப்பணம் கையிருப்பு, வங்கி கையிருப்பு, தங்க நகைகள் ஆகியவை சொந்தமாக உள்ளதாகவும், அதை வைத்துக்கொண்டு மிகுந்த ஆடம்பரமாக வாழ்ந்து வருவதாகவும், எதிர்மனுதாரரின் பராமரிப்பு இல்லாததால் குழந்தை A. அபினேஷ்வரனுடன் எவ்வித தனிப்பட்ட வருமானம் இல்லாமல் மனுதாரர் அவரது பெற்றோர் ஆதரவில் வசித்து வருவதாகவும், குழந்தையின் அன்றாட தேவையான உணவு, உடை,

இருப்பிடம், மருத்துவம், கல்வி ஆகியவற்றிற்கு அவருடைய வயதான பெற்றோர்களை நம்பி வாழ்ந்து வருவதாகவும், குழந்தையுடன் கஷ்ட ஜீவனம் செய்து வருவதாகவும், எதிர்மனுதாரருக்கு போதிய வசதி வாய்ப்புகள் இருந்தும் வேண்டுமென்றே மனுதாரரையும், அவரது குழந்தையையும் புறக்கணிப்பு செய்து வருவதாகவும், மனுதாரருக்கும், அவரது குழந்தையை பராமரிப்பதற்கும், படிப்பதற்கும், உணவு, உடை, இருப்பிடம், மருத்துவச்செலவு மற்றும் இன்னபிற அத்தியாவசிய தேவைகளுக்கும் மனுதாரருக்கு ரூ.15,000/-மும், குழந்தைக்கு ரூ.15,000/-மும், ஆக மொத்தம் ரூ.30,000/- வரை தேவைப்படுவதாகவும் கூறியுள்ளார்.

**8.** மேற்படி எதிர்மனுதாரர் தரப்பில் திருமணம் நடந்ததையோ, குழந்தைகள் உள்ளதையோ மறுக்கவில்லை. எனவே, மனுதாரரும், எதிர்மனுதாரரும் கணவன், மனைவி என்பதும், அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளார்கள் என்பதும் தெரிய வருகிறது. மேலும், மேற்படி எதிர்மனுதாரர் தரப்பில் கணவன் என்ற முறையிலும், குழந்தைகளுக்கு தகப்பன் என்ற முறையிலும் அனைத்து கடமைகளையும் சரிவர செய்து வந்ததாகவும், மனுதாரர் தான் எதிர்மனுதாரரை மதிக்காமல் இருந்து வந்ததாகவும், 28.03.2018-ஆம் தேதியன்று தனது இளைய மகன் அபினேஷ்வரனை அழைத்துக்கொண்டு எதிர்மனுதாரருக்கு எவ்வித தகவலும் தெரிவிக்காமல் வீட்டை விட்டு சென்று விட்டதாகவும் சொல்லியுள்ளார். ஆக மூத்த குழந்தை குழந்தை எதிர்மனுதாரருடனும், இளைய குழந்தை மனுதாரருடன் உள்ளனர் என்பது தெரிய வருகிறது.

**9.** மேலும், எதிர்மனுதாரர் தனது எதிர்உரையில் பிடித்தங்கள் போக ஊதியமாக சுமார் ரூ.35,000/- மட்டும் பெற்று வருவதாக சொல்லியுள்ளார். அதற்கு ஆதரவாக எதிர்மனுதாரரின் வங்கி கணக்கு விபர அறிக்கை எ.ம.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை

பார்க்கும்பொழுது 01.04.2022 முதல் 31.03.2023 வரையான காலங்களுக்கானதாக உள்ளது. அதில் எதிர்மனுதாரருக்கு பிடித்தங்கள் போக சுமார் ரூ.35,000/–த்திற்கு மேல் சம்பளமாக பெற்று வருகிறார் என்பது தெரிய வருகிறது. மேலும், மேற்படி எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி எதிர்மனுதாரர் ஏ.2847 கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றி பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன நாணய சங்கத்தில் ரூ.15,00,000/– பெற்று தனது மாத ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படுவதாகவும் சொல்லப்பட்டுள்ளது. அதேபோல் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எ.ம.சா.ஆ.5 யை பார்க்கும்பொழுது எதிர்மனுதாரர் மேற்படி சங்கத்தில் ரூ.15,00,000/– கடன் பெற்று தவணை தொகையை ஒவ்வொரு மாதமும் செலுத்தியதாக சொல்லப்பட்டுள்ளது.

**10.** மேலும், மேற்படி எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கடன் மற்றும் பொறுப்பு பற்றிய அபிடவிட்டில் எதிர்மனுதாரருக்கு மாதாந்திர செலவாக ரூ.20,000/–மும் மற்றும் தன்னுடன் இருக்கும் தனது மூத்த மகனுக்கு ரூ.20,000/–மும் தேவைப்படுவதாகவும் சொல்லியுள்ளார். அதேபோல் தான் மனுதாரருக்கும், அவருடன் இருக்கும் இளைய மகனுக்கும் அதே அளவு தொகை தேவைப்படும் என்பதை கருத்தில் கொண்டும், எதிர்மனுதாரர் அரசு ஆசிரியர் பணி செய்து அதன் மூலம் பிடித்தங்கள் போக ரூ.35,000/–த்திற்கு மேல் வருமானம் பெற்று வருவதை கருத்தில்கொண்டு மனுதாரருக்கு ரூ.5,000/–மும், அவரிடம் இருக்கும் இளையமகன் A. அபினேஷ்வரனுக்கு ரூ.5,000/–மும், ஆக மொத்தம் ரூ.10,000/–த்தை ஒவ்வொரு ஆங்கில மாதமும் 10–ஆம் தேதிக்குள் இந்த எதிர்மனுதாரர், மனுதாரருக்கு இடைக்கால் ஜீவனாம்சமாக வழங்க வேண்டுமென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக, இந்த மனுவை பகுதியாக அனுமதித்து மனுதாரருக்கு ரூ.5,000/–மும், அவரது மைனர் குழந்தை A. அபினேஷ்வரனுக்கு ரூ.5,000/–

மும் சேர்த்து மாதம் ரூ.10,000/–த்தை இடைக்கால ஜீவனாம்சமாகவும் மற்றும் வழக்கின் செலவு தொகையாக ரூ.5,000/–மும் இந்த எதிர்மனுதாரர், மனுதாரருக்கு கொடுக்க வேண்டும் என்றும், இடைக்கால ஜீவனாம்சத் தொகையை ஒவ்வொரு ஆங்கில மாதமும் 10–ஆம் தேதிக்குள் இந்த எதிர்மனுதாரர், மனுதாரருக்கு கொடுக்க வேண்டும் என்றும், இடைக்கால ஜீவனாம்சத் தொகையை இம்மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து அசல் மனு முடியும் வரை செலுத்த வேண்டும் என்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2023–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19–ஆம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

சார்பு நீதிபதி,
விருதுநகர்.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** – இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்** – இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 01.04.2022 முதல் 31.03.2023 | எதிர்மனுதாரரின் SBI கணக்கு அறிக்கை – கணினி நகல் |
| எ.ம.சா.ஆ.2 | 30.05.2023 | எதிர்மனுதாரருக்கு தாயில்பட்டி கிராமத்தில் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் இல்லை என்று தாயில்பட்டி கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்றிதழ் – அசல் |
| எ.ம.சா.ஆ.3 | 01.06.2023 | ஏ.2847, கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியப்பணியாளர்கள் & ஆசிரியர்கள் கூட்டுறவு சிக்கன நாணயச்சங்கம், கொட்டாம்பட்டியில் எதிர்மனுதாரர் கடன் ரூ.15,00,000/– பெற்று தவணை |

| | | |
|---|---|---|
| | | தொகையை மாதம் மாதம் செலுத்தி வருகிறார் என்று மேற்படி சங்கத்தின் செயலாளரால் வழங்கப்பட்ட சான்று – அசல் |
| எ.ம.சா.ஆ.4 | -- | முதல் தகவல் அறிக்கை – நகல் |
| எ.ம.சா.ஆ.5 | 11.02.2019 | H.C.P. (MD). No.1826/2018 – உண்மை நகல் |

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

சார்பு நீதிபதி,
விருதுநகர்.

சார்பு நீதிமன்றம், விருதுநகர்.
இ.ம.எண்.1/2022 இன்
இ.தி.மு.ம.எண்.43/2022
உத்தரவு
நாள். 19.12.2023